Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 24 ஆம் நாள் துல்ஹஜ் 23 (6 5-64) புதன்கிழமை இதழ் 85

# தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கை

## 5 லட்சம் ஏக்கர் வரண்ட நிலம் அபிவிருத்தி செய்யப்படும்

கொழும்பு, செவ்.

ஐக்கியநாடுகள் விசேஷ நிதி உதவித்திட்டத்தின்கீழ், இலங்கையின் வரட்சிப் பிரதேசத்திலுள்ள ஐந்துலட்சம் ஏக்கர் நிலத்தை அரசாங்கம் அபிவிருத்தி செய்யவிருக்கின்றது.

இத்திட்டம் சம்பந்தமாக நிதிஅமைச்சு, ஐக்கியநாடுகள் நிதிக் குழுவுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வரண்ட பிரதேசத்திலுள்ள காணிகளுக்கு தண்ணீர் வசதிகள் அளிக்க இத்திட்டம்வகை செய்யும். வரண்ட காணிகளுக்கு நீர் வசதியளிக்க மகாவலிகங்கை பயன்படுத்தப்படும்.

அரசாங்கத்தின் இத்திட்டம் அமுலாகும் பட்சத்தில் வரண்ட காணிகள் பல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்த வழி பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்படும்.

## "காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி"

### ஷேக் அப்துல்லா விடம் முஸ்லிம் தலைவர்கள் மகஜர்

சென்னை, மே 5

இன்று காலை சென்னை வந்த காஷ்மீரின் முன்னாள் பிரதமர் திரு. ஷேக்அப்துல்லா சுதந்திரக்கட்சித் தலைவர் திரு. ராஜாஜியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர் அவர்களின் பேச்சுக்களில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டதென்றும் ஆனால் தீர்வு எதுவும் ஏற்படவில்லையென்றும் தெரியவருகிறது.

திருச்சிராப் பள்ளியைச் சேர்ந்த பல முஸ்லிம் தலைவர்கள், இன்று திரு. ஷேக் அப்துல்லாவைச் சந்தித்து மகஜரொன்றைச் சமர்ப்பித்தனர்.

காஷ்மீர் இந்தியாவின் இணைந்த ஒரு பகுதியென்பதை அம் மகஜர் வலியுறுத்தியிருந்தது.

"இந்தியாவின் ஒரு பிரிக்க முடியாத பகுதிதான் காஷ்மீர். மதசார்பற்ற ஒரு நாடாகவிளங்கும் இந்தியாவில் தவறான கருத்துக்கள் நிலை இடமளிக்காது இன ஒற்றுமையை ஏற்படுத்த முழுமுயற்சி யெடுக்க வேண்டும் என்று அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து கோடி இந்திய முஸ்லிம்களின் நலனைக் கருத்தில் கொண்டு காஷ்மீர் பிரச்னையை நோக்கும் படியும் மதத்தின் பேரால் காஷ்மீரில் வீண்சச்சரவுகள் ஏற்பட அனுமதிக்க வேண்டாமென்றும் திரு. ஷேக் அப்துல்லாவை அம்மகஜர் கேட்டுள்ளது.

## தேர்தலை ஒத்திவைத்து பிரச்னைகளுக்குத் தீர்வு

### கூட்டுஅரசாங்கத்தை தமிழரசுக் கட்சி ஆதரிக்கும்?

யாழ்ப்பாணம், செவ.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அங்கத்தவர்களின் ஆதரவோடு தேர்தலை ஐந்து வருடகாலத்திற்கு ஒத்திபோட முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் இம் முயற்சிக்கு ஐக்கிய இடதுசாரி முன்னணியின் ஆதரவை மட்டுமன்றி, மொழியுரிமைய ளித்து தமிழரசு கட்சி அங்கத்தவர்களின் ஆதரவையும், மற்றும் சுயேட்சையாளர்களின் ஆதரவுகளையும் தேட, தனித்தனி முயற்சிகள் நடைபெற்று வருகிறதாகவும் தெரியவருகிறது.

கூட்டு அரசாங்கம் அமைப்பதின் முக்கிய நோக்கம் தேர்தலை ஐந்து வருடகாலத்திற்கு ஒத்தி வைப்பது தானென்றும் இந்தஐந்துவருட காலத்தில் இடதுசாரி தவர்கள் சிறுபான்மையோர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

பல வருடங்களாக தீர்க்கப்படாமலிருந்து வரும் இலங்கை இந்திய பிரச்னையையும் மொழிப் பிரச்னையையும் இந்த ஐந்து வருட காலத்தில் தீர்த்து நாட்டிலிருந்து முற்றாக இனவெறியை ஒழித்து விட வேண்டுமென்று அரசாங்க கட்சியை சேர்ந்த பல அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளார்களாம்.

தேர்தலை ஒத்தி போடுவதை சில சுயேட்சை அங்கத்தவர்கள் விரும்பவில்லையென்றும், அந்த ஒரு சில சுயேட்சை அங்கத்தவர்களின் ஆதரவின்றியே, அரசியல் சட்டத்தை திருத்தக் கூடிய மூன்றில் இரண்டு வாக்குகள் அரசாங்கத்திற்கு கிடைக்குமென அறியப்படுகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## "கூட்டு ஆட்சி பேச்சின் முடிவைப் பொறுத்தது"

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்பேசும் மக்களின் மொழி மற்றும் உரிமைகள் சம்பந்தமாக அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்காது போனாலும் இன்றைய அரசியல் நிலையில் இன்னும் சில வாரங்களுக்கு "பொறுத்திருந்து" பார்ப்பது தான் தமிழரசுக்கட்சியின் தற்போதைய நிலை என்று கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி ஐக்கியமுன்னணியும் சேர்ந்து கூட்டுஅரசாங்கம் அமைப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளின் முடிவைப் பொறுத்தே தமிழரசுக்கட்சியின் அடுத்த நடவடிக்கை என்னவென்பது தெரியும்.

கூட்டு அரசாங்கம் சம்பந்தமாக அரசாங்கக் கட்சியினரோ இடதுசாரியினரோ இதுவரை உத்தியோகபூர்வமாக தமிழரசுக்கட்சியினருடன் பேச்சு எதுவும் நடத்தவில்லையென்றும் ஆனால் தமிழ்பேசும் மக்களின் மொழிப் பிரச்னைக்கு விரைவில் சுமுகமான தீர்வு காண வேண்டிய அவசியத்தைஇடதுசாரியினர் உத்தியோகப்பற்றற்ற முறையில் தமிழரசுக்கட்சியினரிடம் தெரிவித்துள்ளனர் என்றும் அந்தப் பிரமுகர் தெரிவித்தார்.

### ஐ. நா.வுக்கு மகஜர்

இலங்கையிலுள்ள சிறுபான்மையினர் நிலைபற்றி ஐ.நா.வுக்கு மகஜர் அனுப்புவதாக இருந்தயோசனைபற்றி அவரிடம் கேட்டதற்கு அந்தமகஜர் தயாரிக்கப்பட்டபடி இருப்பதாகவும் இன்றுள்ள அரசியல் நிலை காரணமாக அதை அனுப்பும் முயற்சி நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## கி. ச. தேர்தல் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் கிராமசபைத் தேர்தலில் 12-ம் வட்டாரத்தில் வெற்றி பெற்றவரினதும் போட்டியிட்டவர்களினதும் பெயர்கள் தவறாக வெளிவந்துள்ளன. சரியான பெயர்கள் வருமாறு:- சு. சற்குணநாதன் —177, இ. முருகேசு —155, க செல்லன்—134, மு. வாமதேவன—87, சி. செல்லத்துரை—09.

## பொலிசார் மீது வழக்கு தாக்கல் செய்ய யோசனை

### திருமலையில் ஞாயிறன்று நடைபெற்ற சம்பவத்தின் விளைவு

திருக்கோணமலை, செவ்வாய்

சென்ற ஞாயிற்றுக்கிழமை திருக்கோணமலை பத்தாம் டிவிஷனில் பொலிஸார் நடத்திய தாக்குதலில் பலத்த காயமடைந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதல் சபம்பந்தமாகப் பொலிஸார்மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக திருக்கோணமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராசா தெரிவித்தார்.

திருக்கோணமலை பத்தாவது விடிஷனில் சென்ற ஞாயிற்றுக்கிழமை சுமார் நான்கு மணி நேரம் பொலிஸ் கோஷ்டியொன்று ஆண், பெண், குழந்தைகளென்ற பேதம் எதுவுமின்றிக கண்டவர் நின்றவர்மீது கடும் தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது. தாக்குதலைச் சமாளிக்கமுடியாது ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பீதியடைந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அங்குமிங்கும் அலறியபடி ஓடினர்.

பத்தாம் டிவிஷனில் உள்ள மீனவர்களில் சிலர் டைனமைட் வைத்து மீன்பிடிப்பதாகவும் இதுசம்பந்தமாக அங்கு விசாரிக்கச்சென்றஒருபொலிஸ் கான்ஸ்டபிள் மீனவர் சிலரால் தாக்கப்பட்டதாகவும் இதன் எதிரொலியாகவே பொலிஸாரின் தாக்குதல் சம்பவமென்றும் கூறப்படுகிறது.

பொலிஸ் கான்ஸ்டபிள் தாக்கப்பட்ட சம்பவத்தில் ஈடுபட்டதாகக்கருதப்பட்ட சில ஆண்களைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச் சென்று அங்கு வைத்து காலாலும், சப்பாத்துக் காலாலும் அவர்களை கடுமையாகத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

பொலிஸாரைத் தாக்கியதாகப் பத்துப்பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வேறு சிலரையும் அவர்கள் தேடிவருகின்றனர். கைது செய்யப்பட்டவர்கள் திருமலை மாஜிஸ்டிரேட்டின் முன் ஆஜர் செய்யப்பட்டனர். பொலிஸார் தம்மைக் கடுமையாகத் தாக்கியதாக அவர்களில் ஒருவர் மாஜிஸ்டிரேட்டிடம் செய்த புகாரைத் தொடர்ந்து அவரைப் பரிசோதனை செய்யுமாறு வைத்திய அதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பதினான்கு மீன்பிடி வலைகள் தீவைக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் இருபதினாயிரம் ரூபாய்வரை சேதமேற்பட்டுள்ளது. மீன்பிடி வலைகளுக்குப் பொலிஸாரே தீவைத்திருப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 31-ந் திகதி நீர்வேலி முற்றவெளி மைதானத்தில், நீர்வேலி [illegible] விவசாயக் [illegible] சவாரிப்போட்டி நடைபெறவிருக்கிறது. இவ் வைபவத்திற்கு [illegible] எம். பி. திரு. மு[illegible] தலைமை வகிப்பார்.

### மணிவாக்கு

அன்புத் தெய்வத்தின் மீது உங்களுக்கு உண்மையில் நம்பிக்கையிருக்குமாயின் உடன் நீங்கள் உங்கள் கோவில் கதவுகளை தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்குத் திறந்துவிட வேண்டும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

குரோதி ஆண்டு
சித்திரை மீ 24 உ (6-5-64)

## புரட்சி வீரர்

புரட்சிவீரர் என்று நாம் குறிப்பிடுவது மாஸ்கோ, பீகிங் அகராதிப்படியான புரட்சி வீரர்களையல்ல. பதின்மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்பாக தமிழகத்திலே வாழ்ந்த திருநாவுக்கரசரை "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்!" என்று வீரமுழக்கம் செய்தவரைத்தான் இங்கு குறிப்பிடுகின்றேம். இன்று அவரது திருநாள். ஆகையால் அவரையும் அவரது புரட்சியையும் பற்றி நினைவு கூருவது பொருத்தமாகவும் பயனுள்ளதாகவுமிருக்கும்.

இன்று சிறப்பாகத் தமிழர் அரசியலிலே திக்கற்று பெரும் துன்பத்துக்கு உள்ளாகிஇருக்கும் நிலையில் திருநாவுக்கரசரின் வாழ்வும், அவர் காட்டிய நன்நெறியும் எவ்வளவுதூரம் உதவுமென்பதை ஆராயவேண்டும். இன்றுபல சைவக் கோயில்களிலும் சைவஸ்தாபனங்களிலும் அவரது குருபூசை நடைபெறுகின்றது. மானிப்பாயிலே உழவாரப்பணியும் நடைபெறுகின்றது. இவையெல்லாம் நல்லவைதான். ஆனல் இவை வெறும் சம்பிரதாயமாகிவிடாமல் நமது இன்றைய இன்னல்களை நீக்கிக்கொள்ள ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரான் என்ன வழி காட்டியுள்ளாரென்பதை அறிந்து அவ்வழி செல்ல முற்படுவது விவேகமாகுமல்லவா?

அன்று நாவுக்கரசருக்கு ஏற்பட்ட சோதனைகளுடன் ஒப்பிடுகையில் இன்று இங்கு தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் நிச்சயம் பெரிதல்ல. நீற்றறையிற் தள்ளியும், விஷம் கொடுத்தும், மதம் பிடித்த யானையை ஏவியும், முடிவா கக்கல்லுடன் கட்டி அவரைக் கடலில் தள்ளிவிட்டும்கூட அவர் அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை என்று உறுதிப்பாட்டுடன் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று இருந்தாராம். இதன்ரகசியமென்ன? தெய்வமே தமக்குத் துணை நிற்பதற்காக அவர்தமது அருமையான தேவார திருப்பதிகங்களிலே தெரிவித்துள்ளார். 'என்கடன் பணிசெய்துகிடப்பதே' என்று வாழ்ந்தார்.

அவர் சென்றதெல்லாம் அன்பு வழி. தம்மை எவ்வளவோ இம்சைக்கு உள்ளாக்கியவர்மீதும் அவருக்குவெறுப்பில்லை. அன்பால் தமது எதிரிகளை வென்றூர். இறைவனை மறந்து தமது வாழ்க்கையை அவமாக்கியதற்கு வருந்தினர். இறைவன் நாமமே 'நற்றுணை' என்றும் இன்னல்கள் தீர பாவங்களை நீக்க கோவில்களுக்குச் செல்லுங்கள் என்றும் இடித்து இடித்து தமது தேவாரப் பாடல்களில் கூறுகின்றூர். தேவாரங்களைப் பண்ணுடன் பாடுவது நல்லதே. அதைவிட அதிலுள்ள அரிய கருத்துக்களையும் உபதேசங்களையும் உணர்ந்து அவற்றின்படி ஒழுகுபவர்களுக்குத்தான் அதிக பயனுண்டு.

இன்று நமக்குள்ள பலஇன்னல்களுக்கும் பிறர்மீது குற்றம் சுமத்துவதே நம்மில் பலருக்கும் வழக்கமாக இருக்கின்றது. இறைவனை மறந்துவேறு யாரரையோ நம்பி வாழ்கின்றேம். நமது குற்றங்களை நாம் உணருவதில்லை. இந்து சமூகத்திலே தீண்டாமையெனும் கொடிய பழக்கமும் சாதிஇறுமாப்புகளும் அதிகரித்து இச்சமூகத்தை வரவர பலவீனமாக்கி வருகின்றன. இந்த அவலநிலை மாற வழிஎன்ன? பொருளாசைகள் கொள்ளாமல் "அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயாராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்" இறைவனுக்கு அன்பராகில் "அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று அப்பர்அடிகள் சாதியில் உயர்வு தாழ்வு கூருமல் தெய்வபக்தியுள்ளவர்களையே உயர்வாகக் கருத வேண்டுமென்பதை அறிவுறுத்துகின்றூர். இது எவ்வளவு பெரிய மனப்புரட்சி! இந்த மனப்புரட்சி தமிழருக்கு சற்றே ஏற்பட இன்று திருநாவுக்கரசரின் ஞாபகம் உதவுமாயின் அது தமிழரின் துன்பங்கள் நீங்கவும் புதுவாழ்வு மலரவும் பெரிதும் துணைசெய்யலாமல்லவா?

## எல்லையில் உஷார் நடவடிக்கை

பீகிங், மே 5

சீன-ரஷ்ய எல்லையில் மேலதிகமாக 20,000 சீனத் துருப்புகள் நிறுத்தப்படுவார்கள் என்று இங்கிருந்து வெளியான செய்தியொன்று கூறுகிறது.

## 'அறிக்கையை வெளியிடுக'

கொழும்பு, செவ்.

இரத்தத்தை சேமித்து வைத்து அதை நோயாளிகளுக்கு ஏற்றுவது பற்றி ஆராய்ந்த கமிட்டியின் அறிக்கையில் பெரும்பகுதி வெளியிடப்படவில்லை எனக் காலி எம். பி திரு. டபிள்யூ தகநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இரத்தத்தைக் கலந்து வைத்து ஏற்றுவதால் பலர் மரணமானர்கள் என்றும் இதனல் இதுபற்றி ஆராய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டதென்பதையும் இக்கமிட்டிக்கு பிறிஸ்டல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த நிபுணர் உதவிசெய்தார் எனவும் திரு. தகநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார். ஒரு மாதத்துக்கு முன்னர் வெளியிடப்பட்ட கமிட்டியின் அறிக்கை மூன்று பிரிவாக உள்ளதாகவும் அவற்றில் இரு பிரிவுகள் அதிகாரிகளுக்கு பிடிக்காதவகையில் இப்பொழுதுள்ள இரத்த சேமிப்பு பற்றிக் கண்டிருப்பதாக அறியப்படுவதாகவும் இதனலேயே அந்த அறிக்கை வெளியிடப்படவில்லை என்றும் திரு. தகநாயக்கா குறிப்பிட்டுக் கூறியுள்ளார். மக்களுக்கு முக்கியமான ஒரு விஷயத்தில் இவ்விதம் அறிக்கையை வெளியிடாமல் வைத்திருப்பது குறித்து கண்டனம்தெரிவித்த திரு. தகநாயக்கா அந்த அறிக்கையை உடனடியாக வெளியிடும்படி கேட்டுள்ளார்.

## வாகீசா போற்றி போற்றி!

— பண்டிதர் செ. சிவப்பிரகாசம் —

திருவாமூர்ப் புகழனர் செய்தவத்தால் வந்தருளிச்
சிறந்து வாழ்ந்து
மருவாத சமணநெறி மருவியதன் மாண்புக்கும்
வாழ்ந்து காட்டிப்
பெருவாழ்வு வந்தெய்தச் சூலைநோய் சூடர் குடையப்
பெயர்த்துஞ் சைவத
திருவாழ்வு கொண்டருளுந் திருநாவுக் கரசரடி
சென்னி சேர்ப்பாம்.

திருவீரட் டமர்ந்தபிரான் திருவடியே கைதொழுது
சென்னி சேர்த்துப்
பெருவீரங் கொண்டருளி "நாமார்க்குங் குடியல்லோம்"
பாடிப் பின்பும்
உருகார்வத் தொடுஞ்சென்று நீற்றறையில் அடைப்புண்டு
நிழலன் பாதத்
திருவார்ந்த நீழலுறை திருநாவுக் கரசரடி
சென்னி சேர்ப்பாம்.

வேறு

ஆலந்தா னுகந்தமுது செய்தாய் போற்றி;
ஆனையினுற்றெழுப்பெற்ற அரசே போற்றி;
சீலந்தா னுறைப்புண்ட செல்வா போற்றி;
செல்லாத கல்மிதக்கச் சென்ருய் போற்றி;
ஞாலந்தான் நயந்தேத்த வாழ்ந்தாய் போற்றி;
நாடெங்குந் திருக்கோயில் நயந்தாய் போற்றி;
காலந்தா னளவாத கருத்தா போற்றி;
கருதரிய திருநாவுக் கரசே போற்றி.

அப்பூதிக் கருள்புரிந்த அன்பே போற்றி;
அவர்மகனின் விடந்தீர்த்த அரசே போற்றி;
ஒப்பேது மில்லாத ஒருவா போற்றி;
ஒழியாத படிக்காசு பெற்ருய் போற்றி;
எப்போதுந் திருக்கோயில் சூழ்வாய் போற்றி;
எண்ணரிய பதிகங்கள் இசைத்தாய் போற்றி;
தப்பாதே மறைக்கதவந் திறந்தாய் போற்றி;
தவளநீ றணிமேனித் தலைவா போற்றி.

திருக்கயிலை ஐயாற்றிற் கண்டாய் போற்றி;
திகழ்கின்ற உழவாரப் படையாய் போற்றி;
விருப்பமுடன் தொண்டுசெயும் விரதா போற்றி;
மெய்யெல்லாஞ் சிவக்கோல விளக்கேபோற்றி;
ஒருக்காலுஞ் சிவன்கழலே மறவாய் போற்றி;
ஓயாது பாடல்மழை பொழிவாய் போற்றி;
இருக்கான தாண்டகத்தின் இறைவா போற்றி;
இனிக்கின்ற வாகீசாபோற்றி போற்றி.

## 'சோஷலிஸம் என்ற போர்வையில் சிங்கள மயமாகிறது'

—உடுப்பிட்டி எம். பி.

## 'சிறுபான்மையோர் உரிமையில்லாமல் நாடு முன்னேற முடியாது'

—திரு. அமிர்தலிங்கம்

சுழிபுரம், செவ்வாய்

சோஷலிஸம் என்ற போர்வையில் எல்லாம் சிங்கள மயமாக்கப்படுகிறதென்றும் 21 கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ள தொழிற்சங்கங்கள் எல்லாத் தொழிலாளரையும் சரிசமமாக நடத்தப்படவேண்டுமென 22-வது கோரிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் வழக்கம்பரை அம்மன்கோவில் வீதியில் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற மேதின விழாவில் பேசுகையில் கூறினர்.

இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் சிறுபான்மையினரின் உரிமைகள் கொடுக்கப்பட்டால் தான் நாடு முன்னேறமுடியுமென்ருர்.

திரு. சிவசிதம்பரம் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:

அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் தங்கள் உரிமையைப் பெறுவதற்காகப் போராடி வெற்றி பெற்று இன்று கொண்டாடும் தினம் தான் மேதினம். இத்தினத்தை இன்று இலங்கையில் கொண்டாட உரிமையுடையவர்கள் தமிழ்பேசும் மக்களே. சோஷலிஸம் என்ற போர்வையில் எல்லாம் சிங்கள மயமாக மாறிவருகின்றது இதைத் தான் இன்று தமிழ்பேசும் மக்கள் எதிர்க்கின்ருர்கள். அன்று அரசாங்க ஊழியர்களின் உழைப்பால் பாராளுமன்றப் பிரதிநிதியாக வந்த திரு. ரி. பி. இலங்கரத்தின இன்று அரசாங்க ஊழியர்கள் வாழ்வுக்கு உலைவைப்பதைத் தான் நாம் காணமுடிகின்றது. சிறுபான்மையினர் விஷயமாக அண்மையில் பாராளுமன்றத்தில் சில மசோதாக்கள் விவாதித்து நிறைவேற்றப்பட்டபோது அம்மசோதாக்கள் சிறுபான்மையினருக்குப் பாதகமாக இருந்தும் அதை ஆதரித்து நிறைவேற்ற அரசாங்கத்துக்கு உதவியாக இடதுசாரித்தலைவர்கள் இருந்தார்கள். உண்மையில் இடதுசாரித் தலைவர்கள் சிறுபான்மையினர் விஷயத்தில் உதவமாட்டார்களென்பதை இச்சம்பவத்திலிருந்து அறியலாம். அண்மையில் 21 கோரிக்கைகளை அரசாங்கத்துக்குத் தொழிற்சங்கங்கள் சமர்ப்பித்தன. அவற்றுடன் 22-வது கோரிக்கையாக எல்லாத் தொழிலாளர்களும் சரிசமமாக மதிக்கப்படவேண்டுமென்பதைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், அரசாங்க ஊழியர்களுக்கு நாம் சகல உதவிகளையும் செய்யவேண்டுமென்று கூறினர். (6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

நம் இலங்கைக்கு அமெரிக்கா அளித்துவந்த உதவிகளைச் சில காலமாக நிறுத்தியுள்ளதல்லவா? அந்த உதவிகள் மீண்டும் கிடைப்பதற்கான வாய்ப்பு சீக்கிரத்தில் ஏற்படலாமென்று அறியவந்தேன்.

பெட்ரோல் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டியதை இலங்கை அரசாங்கம் உணர்ந்து சீக்கிரத்தில் அதற்கான ஒழுங்கு செய்யலாமென்றும், அதைத்தழுவி அமெரிக்காவும் உதவிகளை மீண்டும் அளிக்கலாமென்றும் தெரிகிறது

இதற்கு முன்னேடியாகவோ என்னவோ மூன்று அமெரிக்க விஞ்ஞான நிபுணர்கள் யாழ்ப்பாணம் வந்து சில விஞ்ஞான சினிமாப்படங்களைக் காட்டினர். விஞ்ஞான புத்தகக் காட்சிகளையும் நடத்தினர்.

நமது வாலிபர்கள் பலர் ஸ்காலர்ஷிப்மீது அமெரிக்கா சென்று படிக்கையில், பாதியிலே உதவி நிறுத்தப்பட்டுவிட்டதைக் கேட்டதும் அவர்கள் கதி என்ன ஆயிற்ரே என்று கவலையாக இருந்தது. ஆனல் அவர்களில் அநேகமாக எல்லாரும் வேறு விஷயங்களில் தொடர்ந்து உதவி பெற்றுத் தங்கள் பயிற்சியைப் பெற்றுவருவதாக அறிய ஆறுதலாக இருந்தது.

எப்படியும் அந்த உதவியை நிறுத்தியதுபற்றி அமெரிக்காவுக்கே பெருமையாகவோ மகிழ்ச்சியாகவோ இருக்கமுடியாது. இவ்வித உதவிகளை மீண்டும் எவ்வளவு சீக்கிரத்தில் அளிக்க முடியுமோ அவ்வளவும் நல்லதாகும்.

* * *

நமது வாலிபர்களில் பலரும் விஞ்ஞானம் பயின்று பட்டம் பெற்றுவிட்டு, பின்னர் வேலையில்லாமல், அவர்களது திறமையெல்லாம் வீணுகிறதல்லவா? இதற்கு என்ன செய்யலாமென்று அமெரிக்க விஞ்ஞானிகளைக் கேட்டேன். பாகிஸ்தானிலும்கூட இதே நிலைமைதானென்றும், கைத்தொழில் அபிவிருத்தி இல்லாததால், விஞ்ஞான வாலிபர்களுக்கு ஆசிரியர் தொழில்தான் உள்ளதென்றும், ஆனல் இங்கு யாழ்ப்பாணத்திலே உணவு உற்பத்தி, உடை உற்பத்தி, மீன் பிடித்தல், திராட்சை முதலிய பழ உற்பத்தி இவற்றை விஞ்ஞான முறையில் நடத்த விஞ்ஞான வாலிபர்கள் முன்வர அதிக இடம் இருக்கிறதென்றும், இங்குள்ள இயற்கை வளங்களையும், பூமியையும் நன்கு பயன்படுத்த முன்வரும் விஞ்ஞான வாலிபர்களுக்கு நல்ல சான்ஸ் இருப்பதாயும் சொன்னர்கள்.

மாதச் சம்பளம், அதிக சீதனத்துடன் அழகான மனைவி இவற்றுக்காகத்தான் நம் வாலிபர்கள் காத்திருப்பதாயும், இவ்வித ஆராய்ச்சித்துறைகளில் புக அவர்களில் பலர் முன்வருவதில்லை என்றும் ஓர் அன்பர் கூறியதும் பலரும் சிரித்துவிட்டனர், வரவர அவசியம் அதிகரித்துவருவதால், அவர்களும் மனம்மாறுவார்கள்தானே!

* * *

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை ......" என்று ஒரு தேவாரமுண்டல்லவா? அதைப் பாடியதும் ஓர் அன்பருக்கு எதிர்பாராதவிதமாக பொற்கிழி கிடைத்ததாம்! யாழ்ப்பாணத்திலே சில வருடங்களுக்கு முன்பாக நடந்த இக்கதைபற்றிய விபரங்களை ஓர் அன்பர் ஒரு கூட்டத்தில் சொன்னர்.

யாழ்ப்பாண முனிவரிடம் நெருங்கிச் செல்ல ஒருவர் மிகவும் தயங்கினராம். அவர் இனிமையாகத் தேவாரம் பாடுவார். ஒருநாள் துணிந்து முனிவரிடம் சென்று பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை... என்ற தேவாரம் பாடுகையில்,

(6-ம் பக்கம் பார்க்க)

# "காஷ்மீர் பேச்சுக்கள் திருப்தியாக விருக்கின்றன"

## ஷேக் அப்துல்லா கருத்து

புதுடில்லி, மே 5

வர்த்தாவுக்கு நேற்றுசென்ற திரு. ஷேக் அப்துல்லா ஆச்சாரியா வினோபாஜியைச் சந்தித்து மூன்றுமணி நேரம் வரை பேச்சுகள் நடத்தினர்.

வினோபாஜியைச் சந்தித்து பேச்சுகள் நடத்திய திரு. ஷேக் அப்துல்லா பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஆச்சாரிய வினோபாபாவேயுடன் நடத்திய பேச்சுகள் திருப்திகரமாகவிருந்த தென்றும் ஆனால் காஷ்மீர் பிரச்னை குறித்து எந்தவிதமான முடிவும் ஏற்படவில்லையென்றும கூறினர்.

"இந்தியத் தலைவர்களுடன் நடத்தும் பேச்சுகள் எப்படியான சூழ்நிலையில் நடைபெறுகிறது' என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு திரு. ஷேக் அப்துல்லா பதிலளிக்கையில் இந்தியத் தலைவர்களுடன் நடத்தும் பேச்சுகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறதென்றும் இந்தப் பேச்சுகளில்எந்தவித அடிப்படை வித்தியாசங்களும் ஏற்படவில்லையென்றும் கூறினர்

"காஷ்மீர் பிரச்னையால் எந்த நாட்டுக்கும் இடைஞ்சல் இருக்கக்கூடாது. காஷ்மீர் மக்களின் நலன்களைக் கவனித்து இப்பிரச்னை சுமுகமகத் தீர்க்கப்பட வேண்டும்" என்றும் திரு' ஷேக் அப்துல்லா தெரிவித்தார்.

திரு. ஷேக்அப்துல்லா புதுடில்லிக்கு வந்த சுமார் ஒரு வார காலத்துக்குள் பிரதமர் நேரு, உபராஷ்டிரபதி டாக்டர் ஸகீர் ஹுசெய்ன், இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர், இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர், ஆச்சாரிய வினோபாஜி உட்பட பல அரசியல், மத தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுகள் நடத்தியுள்ளார். பிரதமர் நேருவுடன் அவர் மீண்டும் பேச்சுகள் நடத்தவிருக்கிறர்.

திரு. ஷேக்அப்துல்லா வார்தாவிலிருந்து இன்று காலை சென்னை வந்து சேர்ந்தார். இன்று அவர் இந்தியாவின் முன்னுள் கவர்னரும் சுதந்திரக்கட்சித் தலைவருமான திரு. ராஜாஜியைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்துவார்.

காஷ்மீர் பிரச்னை:

# ஐ. நா. விவாதம் இறுதியாகவிருக்கும்

## பார்வையாளர் அபிப்பிராயம்

நியூயோர்க், மே 5

இன்றிரவு கூடிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, காஷ்மீர் பிரச்னை குறித்து விவாதித்தது.

காஷ்மீர் பிரச்னை பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெறுது என்றும், இன்று ஆரம்பித்துள்ள இவ்விவாதமே இறுதியாகவிருக்குமென்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பார்வையாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸைச் சேர்ந்த பிரதிநிதியொருவரே பாதுகாப்புச் சபையின் இம்மாதத் தலைவராகவிருக்கிறா. இவர், நேற்று இந்திய கல்வி மந்திரி திரு. சக்ளாவையும் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோவையும் அழைத்து முன்னேடிப் பேச்சுக்கள் நடத்தினர்.

நேற்றிரவு திரு. சக்ளா பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்பதை வலியுறுத்திக் கூறியதுடன் தற்போதைய ஐ. நா. கூட்டம் அவசியமற்றதென்றுப் தெரிவித்தார்.

திரு. புட்டோ நேற்றுத் தெரிவிக்கையில், காஷ்மீர் பிரச்னை குறித்து விவாதிக்கும் இக்கூட்டத்தில் ஒரு சமரசமான முடிவு ஏற்கடுமென்று தாம் கருதுவதாகக் கூறியுள்ளார்'

இன்று ஆரம்பித்துள்ள காஷ்மீர் விவாதத்தில், காஷ்மிர் பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்படுமென்று பாகிஸ்தான அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப் கான் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவிலுள்ள

# 'டைம்ஸ்' காரியாலயத்தை மூடும்படி ரஷ்யா கோரிக்கை

## நிருபருக்கும் வெளியேற உத்தரவு

மாஸ்கோ, மே 5

மாஸ்கோவிலுள்ள அமெரிக 'டைம்ஸ்' சஞ்சிகையின் காரியாலயத்தை மூடுமாறு, சம்பந்தப்பட்ட ஸ்தாபனத்தை ரஷ்ய அரசாங்கம் கேட்டுள்ளது. 'டைம்ஸ்' பத்திரிகையின் மாஸ்கோ நிருபரை 24 மணி நேரத்துக்குள் வெளியேறுமாறும் ரஷ்யா உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்க-ரஷ்ய உறவுகளைப் பாதிக்கும்வகையில், 'டைம்ஸ்' பத்திரிகையில் கட்டுரையொன்று வெளியானதென்றும் சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவைப் பாதிக்கும்வகையிலும் அக்கட்டுரை வரையப்பட்டிருந்ததென்றும் ரஷ்ய அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்க 'டைம்ஸ்' சஞ்சிகை பிரபல்யம் வாய்ந்ததொரு சஞ்சிகையென்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுபான்மையினர்

புதுடில்லி, மே 5

மேற்குப் பாகிஸ்தானில் இப்பொழுது சுமார் இரண்டு லட்சம சிறுபான்மை சமுகத்தினர் இருப்பதாக இந்திய மந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## செய்திக்கு மறுப்பு

புதுடில்லி, மே 5

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த இளம் பெண்களைச் சிலர் அரபுநாடுகளுக்கு விற்பனை செய்கிறர்கள் என்ற செய்திக்கு மத்திய மந்திரி திருமதி லட்சுமி மேனன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளில் வெளியான இச்செய்தி மிகவும் தப்பானதென்று அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானில் வசிக்கும் சிறுபான்மை இளம் பெண்கள் அரபு நாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவதில்லையென்று திருமதி லட்சுமி மேனன் கூறியதைப் பொய்யாகத் திரித்து விஷமத்தனமான முறையில் பாகிஸ்தான் பத்திரிகை வெளியிட்டுள்ளதென்று இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## சீனமீது ரஷ்யா கண்டனம்

மாஸ்கோ, மே 5

உத்தேச ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் ரஷ்யாவை அனுமதிப்பதற்குச் சீன எடுத்து வரும் எதிர் நடவடிக்கைகள் குறித்து ரஷ்ய அரசாங்கம் சீனவைக் கண்டித்துள்ளது.

ரஷ்யா ஒரு ஆசிய நாடல்லவென்றும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் ரஷ்யா கலந்து கொள்வதை அனுமதிக்கமுடியாதென்றும் சீன அறிவித்துள்ளது.

ஆனல் ரஷ்யா ஒரு ஆசிய நாடென்றும் இம்மகாநாட்டில் ரஷ்யா கலந்துகொள்ளவேண்டுமென்றும் பல நாடுகள் தெரிவித்துள்ளன.

## காஷ்மீர் வெடி விபத்துகள்

புதுடில்லி, மே 5

காஷ்மீரில் சென்றவாரம் நடைபெற்ற இரு வெடிவிபத்துகள் குறித்து ஐந்து பேர் விசாரணைசெய்யப்பட்டு வருகிறர்கள் என்று இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை முதலாவது வெடி விபத்து ஏற்பட்டதென்றும் அதன் பின்னர் இரண்டாது வெடி விபத்து சம்பவம் வியாழக்கிழமை நிகழ்ந்ததென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. வெடி விபத்துகளினுல் சேதமெதுவும் ஏற்படவில்லை 24 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சைப்ரஸ் பற்றி யுதாண்ட்

நியூயோர்க், மே 5

சைப்பிரஸ் நெருக்கடி இன்னும் தீரவில்லையென்றும் அங்குள்ள நிலைமை தெளிவாகவில்லையென்றும் ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் அறிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்துள்ள ஒரு அறிக்கையில்தான் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சைப்பிரஸில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஐ. நா. சமாதானப் படைக்கு 1000 துருப்புகளை அனுப்ப டென்மார்க் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

## அருணகிரிநாதர் இசை விழா

திருச்சி, மே 5

தில்லைநகரில் ஆறு நாட்களாக நடைபெற்று முடிவடைந்த அருணகிரிநாதா சங்கீத விழாவில் பல சங்கீத வித்துவான்கள் கலந்து கொண்டனர்.

அருணகிரிநாதரின் சங்கீத விழாவில் கலந்து கொண்ட எல்லா இசையாளர்களும் அருணகிரிநாதர் இயற்றிய பாடல்களையே பாடினர். முதல் நாள் நிகழ்ச்சிகளில் அண்ணமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரியைச் சேர்ந்த திருவாளர்கள் எம். எம். தண்டபாணி தேசிகரும் டி. கே. ரங்காச்சாரியும அருணகிரி நாதரின் பல பாடல்களை பல்வேறு ராகங்களில் பாடினர். கடைசி நாளன்று, சிக்கல் சிங்கார வேலவர் திருப்புகழ் பாடசாலையைச் சேர்ந்த திரு. டி. வி. குஞ்சிதபாதத்தின் மாணவர்கள் திருப்புகழ் பாராயணம் நடத்தினர்.

அருணகிரி நாதர் பற்றி திரு. கிருபானந்த வாரியார் நிகழ்த்திய கதாப் பிரசங்கத்துடன் விழா முடிவடைந்தது.

## சீனவின் அணு பரீட்சை

பீக்கிங், மே 5

சில வருட காலத்துக்குள் சீன அணு ஆயுத பரீட்சையொன்றை நடத்துமென்று சீன வெளிவிவகார மந்திரி மார்ஷல் சென்-யீ அறிவித்துள்ளார்.

# இந்திய முஸ்லிம்களின் அவசர கோரிக்கை

புதுடில்லி, மே 5

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியென்றும் சட்டபூர்வமான இம்முடிவை மாற்றும் நடவடிக்கையெதுவும் மேற்கொள்ள வேண்டாமென்றும் கோரி மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பல முஸ்லிம் அரசியல் தலைவர்களும் ஸ்தாபனங்களும் கட்சிகளும் ஐ. நா. அங்கத்தவர்களுக்கு தந்திகள் அனுப்பியுள்ளன.

"காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்பதே இந்திய முஸ்லிம்களின் ஏகமனதான முடிவு. இந்த முடிவுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் இந்திய முஸ்லிம்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் காஷ்மீர் பிரச்னை குறித்து தற்பொழுது விவாதிக்கும் ஐ. நா. பாதுகாப்புச் சபை இந்த முடிவை மாற்றும் எந்த யோசனையையும் வெளியிடக் கூடாது" என்று அத்தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள வெளிநாட்டு தூதர்களுக்கும் முஸ்லிம் நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் ஹைகமிஷனர்களுக்கும் இத்தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து

# தாயகம் திரும்பும் அகதிகளுக்கு புனர்வாழ்வளிப்புத் திட்டம்

மதுரை, மே 5

இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்பும் இந்தியர்களுக்கு பாதுகாபபளிக்கும் பொருட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மறுவாழ்வளிப்புத் திட்டங்களை ஆரம்பிப்பது சம்பந்தமாக தமிழ்நாடு அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது. இத்திட்டத்துக்கிணங்க இராமநாதபுரம் மாவட்டத்தில் சர்வேக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

அதிகார பூர்வமாக எடுக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கிணங்க 1958-ம் ஆண்டு இறுதிவரை இலங்கையிலிருந்து இந்தியா திரும்பியுள்ள 7,760 குடும்பங்கள் இந்தியாவில் வாழ்ந்து வருகின்றன எனத்தெரியவருகிறது. இவற்றுள் இராமநாதபுரம், திருவாத்தனை பகுதிகளில் 2,000க்குமதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இலங்கை அகதிகளை குடியமர்த்த வகைசெய்யும் திட்டமொன்று சுமார் ஐந்து வருட காலத்துக்கு முன்னர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கரையோரம பகுதிகளில் அமுல்செய்யப்பட்டது. தெங்கு அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் இத்திட்டம் அமுலாகிவந்தது. முக்கியமாக இத்திட்டம், காணி இல்லாத ஏழைகளுக்காகவே கொண்டு வரபபட்டது. ஆனல் இத்திட்டம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 190 குடும்பங்களுக்கு மட்டுமே குடியிருக்க வகைசெய்தது தோண்டி, திருபாலக்குடி, சுந்தரபாண்டியபுரம் ஆகிய பகுதிகளில் வாழும இலங்கை அகதிகளில் தெரிவு செய்யப்பட்ட மூவருக்கு நிதி உதவியாக ரூ. 1000 அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கோழிப்பண்ணை அபிவிருத்திகளுக்காக இப்பண உதவி அளிக்கப் படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 100 கோழிகளும் தேவையான சாதனங்களும் வழங்கப்படும். இத்திட்டம் மற்றைய 13 கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படவிருக்கின்றது. இதன் பலனக மேலும் 16 குடும்பங்கள் பயனடைவர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்பொழுது சர்வே நடத்திவரும் கலெக்டர் பலவித அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அரசாங்கத்துக்கு யோசனை கூறுவார் எனத் தெரியவருகிறது.

இலங்கையிலிருந்து வெளியேறிவரும் அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் திட்டததிற்கு ராஜ்ய அரசாங்கம் உதவியளிக்கும் என அறியப்படுகிறது.

## இந்திய பிரஜைகள்

புதுடில்லி, மே 5

புதிதாக சுதந்திரமடைந்த ஆபிரிக்க நாடுகளில் வசிக்கும் இந்தியப் பிரஜைகள், தாங்கள் எந்த நாட்டு பிரஜை என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென்று இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

புதிதாக சுதந்திரமடைந்த ஆபிரிக்க நாடுகளில் வசிக்கும் இந்தியப் பிரஜைகள் இந்தியாவுக்குத் திரும்பினுல் அவர்களுக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்படுமென்றும் இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

தாயகம் திரும்பும் இந்தியர்களுக்கு, தங்களது சொத்துக்களையும் உடலமைகளையும் எடுத்துவர அனுமதி வழங்கப்படும். இந்தப் பிரச்னையைச் சம்பந்தப்பட்ட ஆபிரிக்க நாடுகளுடன் சுமரமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

## யேமனுக்கு பிரிட்டிஷ் துருப்புகள்

லண்டன், மே 5

ஜெர்மனியிலிருந்து யேமனுக்கு பிரிட்டிஷ் துருப்புகள் அனுப்பப்படுமென்றும் யேமனில நிலைமை திருப்திகரமாகவில்லையென்றும் பிரிட்டிஷ் பிரதமர் சர். அலக் டக்ளஸ் ஹியூம் அறிவித்துள்ளார்.

## 21 பேருக்கு மரண தண்டனை

டமாஸ்கஸ், மே 5

ஹாமா என்ற இடத்தில் நடைபெற்ற அரசாங்க எதிர்ப்புச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட 21 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மத்திய ஸிரியாவிலுள்ள இராணுவ நீதிமன்றம் இத்தண்டனையை விதித்துள்ளது.

ஹாமாவில் இரு மாணவர்கள் சிறையில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த மாதம் அங்கு அசம்பாவிதமான சம்பவங்கள் நடைபெற்றன. கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் 21 பேருக்கு மரணதண்டனையும் 5 பேருக்கு ஆயுள் தண்டனையும் 8 பேருக்கு 15 வருடச் சிறைத்தண்டனையும் 2 பேருக்கு 10 வருடச் சிறைத்தண்டனையும் ஒருவருக்கு 7 வருடமும் 3 பேருக்கு 6 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. 5 பேர் விடுதலைசெய்யப்பட்டனர்.

## மரம்விழுந்து இருவர் மரணம்

கண்டி, செவ்.

இங்குள்ள மகா விஷ்ணு தேவாலயத்தில் வைக்கப்பட்ட புனித சின்னத்தைத் தரிசிக்க வந்த மக்களில் ஒருபகுதியினர்மீது அங்குள்ள மரமொன்று விழுந்ததால் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் மரணமானர். 20 பேர்கள் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஆழி மிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான்

— வி. என். சி. —

**சைவ சமய குரவர் என்று போற்றப்படும் நால்வரில் திருநாவுக்கரசுநாயனரின் குரு பூசை தினம் சித்திரை மாதத்து சதய நட்சத்திரத்தில், அதாவது இன்று புதன் கிழமை கொண்டாடப்படுகிறது.**

திருவாரூரிலே வேளாளர் குலத்தில் உதித்த நாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார். தாய் தந்தையர் இறந்துவிட அவர் பாடலிபுரத்துக்குச் சென்று சமண சமயத்தைத் தழுவியிருந்தபோது சமண குருமார் அவருக்கிட்ட பெயர் தருமசேனர். இறைவன் திருவருளாலே அவருக்குச் சூலை நோய் உண்டாகி மறுபடியும் அவர் சைவ சமயத்தைத் தழுவி, 'கூற்றாயினவாறு' என்ற முதலாவது திருப்பதிகத்தைப் பாடி சூலை நோய் நீங்கப் பெற்றபோது திருநாவுக்கரசு என்ற நாமம் அவருக்கு இறைவனாலேயே வழங்கப்பட்டது. திருஞானசம்பந்தநாயனர் அவரை 'அப்பரே' என்றழைத்தபோது அப்பர் சுவாமிகள் என்ற பெயர் உண்டாகிற்று. பல அற்புதமான திருத்தாண்டகங்களை இயற்றியமையால் சேக்கிழார் அவருக்கு தாண்டக வேந்தர் என்ற நாமத்தையும் சூட்டினர்.

நாயன்மார்கள் எல்லோரிலும் கூடுதலான அற்புதங்களை நிகழ்த்தியவர் திருநாவுக்கரசு நாயனர். ஒவ்வொரு அற்புதங்கள் நிகழ்ந்தபோதும் அவர் பாடியருளிய திருப்பதிகங்களை அறியாத சைவ சமயிகள் இல்லையென்றே கூறலாம்.

சூலைநோய் நீங்கிய போது
—'கூற்றாயினவாறு'
பல்லவ மன்னன் அழைப்புக்கு
—'நாமார்க்கும் குடியல்லோம்'
சுண்ணும்பறை குளிர்ந்தபோது
—'மாசில் வீணையும்'
விஷம் அமுதானபோது
—'துஞ்சிருள் காலை'
யானையை அடக்கியபோது
—'சுண்ண வெண்'
கல்மீது கடலில் மிதந்தபோது
—'சொற்றுணை வேதியன்'
சூலமும் இடபமும் பொறிக்கப்பட்டபோது
—'பொன்னார் திருவடி'
பாம்பு விஷம் நீங்கியபோது
—'ஒன்று கொலாம்'
கைலைக்குப்போய் திருவையாற்றில் மிதந்தபோது
—'மாதர்பிறைக் கண்ணியானை'

ஞானசம்பந்தர் திருமுலைப்பால் ஊட்டப்பெற்றவர். சுந்தரமூர்த்தியோ முற்பிறப்பில் ஆலாலசுந்தரராய் சிவபெருமானுக்குத் தொண்டுசெய்தவர் ஆகவே இவர்கள் இருவர் ஏற்கனவே திருவருள் பெற்றவர்கள் என்று கூறலாம். ஆனால் அப்பரோ உலகத்தில் அளவற்ற துன்பங்களுக்குள்ளாகி, இறைவன் மீதுள்ள அன்பின் விளைவாய், பக்தி நெறியில் பரிபூரணமாகத் திளைத்திருந்து இறைவனடி சேர்ந்தவர்.

திருநாவுக்கரசர் பூம்புகலூரில் செய்த உழவாரத்தொண்டு அன்புக்கும், அறத்துக்கும், பற்றற்ற வாழ்வுக்கும் துறவறத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இன்றும் விளங்குகின்றது. கடவுளின் சோதனைப்படி அப்பர் சுவாமிகள் உழவாரத்தால் புல்பூண்டுகளைச் செதுக்கச் செதுக்க பொன்னும் மணியும் ரத்தினமும் அகப்பட்டன. அவர் அதையெல்லாம் கொண்டுபோய் திருக்குளத்தில் எறிந்துவிட்டார், பின்பும் இறைவன் சோதனைப் பிரகாரம் அழகிய தேவமாதர் அவர்முன் தோன்றி ஆடல் பாடல் செய்தனர். அவருக்கு அந்த உருவங்களெல்லாம் தேவ உருவங்களாகத் தோன்றின.

அப்பர் சுவாமிகள் சுமார் 46,000க்கு மேற்பட்ட பதிகங்களை அருளிச் செய்தாராம். அவற்றில் செல்லரித்தவை போக எஞ்சியிருப்பவை ஆக 312 தான். நாவுக்கரசர் என்ற பெயருக்கேற்ப அவருடைய பாடல்களில் பக்தி நெறியும் தமிழ் மணமும் பரிமளிக்கும்.

தலை கொள் நஞ்சமு தாக
விளையுமே
கழலில் நீறு தடாகமு தாகுமே
கொலை செய் ஆனை குனிந்து
பணியுமே
கூர் அரா விடந் தீரெனத்
தீருமே
கலை கொள் வேத வனப்பதி
தன்னுளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலை கொள் வாரியிற் கல்லு
மிதக்குமே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப்
பாடலே

---

# கொழும்பில் நடனகலா மன்றம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் சினிமாத் தயாரிப்பு ஸ்தாபனமாக இயங்கிவரும் சித்திரோதயா என்ற தாய் ஸ்தாபனத்தின் ஒரு கிளைப் பிரிவாக சித்ரோதயா நடனகலா மன்றம் மே தினத்தன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

'மாணவர்களுக்குத் தரமான முறையில் பரதநாட்டியம், கதகளி, நாட்டிய நாடகம் முதலிய துறைகளில் தக்க பயிற்சியளிப்பதோடு இலங்கையில் தயாராகிவரும் சிங்கள தமிழ் சினிமாப் படங்களில் இடம்பெறும் நாட்டிய நிகழ்ச்சிகளையும் படப்பிடிப்புக்கு ஏற்றபடி தயாரித்து அளிப்பது தான் சித்ரோதயா நடனகலா மன்றத்தின் நோக்கம்" என்று அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய திரு. என். இரத்தினசபாபதி கூறினர்.

மெய்கண்டான் திரு. என். இரத்தினசபாபதி தலைவராகவும், திரு. வி. இராஜதுரை எம். பி., திரு. வ. நடராசா (விவேகானந்த மஹாவித்தியாலய அதிபர்) ஆகிய இருவரும் உபதலைவர்களாகவும், பின்வருவோர் நடனகலாமன்றத்தின் ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்: திரு. டி. சச்சிதானந்தம் (செயலாளர், ஒ பனை டைரக்டர்), திருமதி எஸ். மங்களாவதி (பொருளாளர், வகுப்புப் பொறுப்பாளர்), நடனகலாமணி திரு. கே. என். நவரத்தினம் (நடன டைரக்டர்), திரு. வி நாராயணதாஸ் (இசை, ஒளி, அமைப்பு டைரக்டர்) திரு. எஸ். பரஞ்சோதி (நிகழ்ச்சி நிர்வாக மனேஜர்), செல்வி வி. பராசக்தி, திருமதி டி. கந்தசாமி (கலைத்துறை உதவியாளர்.)

மே மாதம் 22-ந் திகதி வெள்ளிக்கிழமை இந் நடனகலாமன்றம் ஒரு கலைவிழாவை ஏற்பாடு செய்திருக்கிறது. இவ் விழாவுக்கு கல்வி கலாச்சார உதவி அமைச்சர் திரு டி. பி. தென்னக்கூன் தலைமை தாங்குவார். நகரமேயர் திரு. வி. ஏ. சுகததாசா குத்துவிளக்கேற்றி விழாவினை ஆரம்பித்துவைப்பார். திரு. வி இராஜதுரை எம். பி. சொற்பெருக்காற்றுவார்.

# இலங்கை, இந்தியாவின் குடியேற்ற நாடாகிவிடுமாம்

## இடதுசாரிகூட்டு ஆட்சி பற்றி ராஜரத்தின அலறல்

சொர்ணதோட்டம், செவ்.

"தமிழ் மொழிக்குச் சமஅந்தஸ்து, இந்தியருக்குப் பிரஜா உரிமை, வாக்குரிமை ஆகிய தங்களது கோரிக்கைகளைப் பெறுவதற்காக இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குள்ளும் புறமுமாக இரட்டைப் போராட்டம் நிகழ்த்துகிறது. இ. ஐ. மு- அரசாங்கத்துடன் இணைந்தால் என்ன நடக்கும்...? சர்வாதிகாரம் நாட்டில் தலைவிரித்தாடும். சர்வாதிகாரிகளாகத் திகழ்பவர்களோ ஐ. இ. மு. யின் தலைமையில் இயங்கும் இந்திய வம்சாவழியினராகவே இருப்பர், ஈற்றில் இலங்கை இந்தியாவின் குடியேற்ற நாடாகும். எனவே ஸ்ரீ. ல. சு. வுக்கும் ஐ. இ. முவுக்கும் இணைப்பு ஏற்படுவதை எத்தகைய விளைவுகள் ஏற்படினும் எதிர்த்துத் தடுக்கத் தேசபக்தியும் தியாக புத்தியும் உள்ள மக்கள் கிளர்ண்டெழவேண்டும்" என்று ஜாதிகவிமுக்தி பெரமுனத் தலைவரும் வெலிமடைப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. கே. எம். பி. ராஜரத்ன பண்டாரவளையில் நிகழ்ந்த மே தின விழாவொன்றிற் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "சமீபத்தில் சீவாலி வித்தியாலயத்தில் நிகழ்ந்த பௌத்த ஜாதிக பலவேகயாவின் பொதுக்கூட்டமொன்றில் மேத்தானந்தா பேசிய பேச்சை மறுத்து மேத்தானந்தா ஒரு அறிக்கையை பொதுமக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும். எப்போது என். எம். இந்தியர்கள் அனைவரும் இந்த நாட்டினின்றும் விரட்டப்படவேண்டும் என்று கூறினர்" என்று மேத்தானந்தாவைக் கேட்க நான் விரும்புகின்றேன். என். எம். ஒரு போதுமே தமது கொள்கைகளை மாற்றமாட்டார். தான் அதிகாரத்தை அடையும்வரையும் மௌனமாயிருப்பது அவரது இயல்பு. நுவரேலியாவில் அநுராவோடு கிரிக்கெட் விளையாடினரென்பதற்காக என். எம். மின் கொள்கையில் மாற்றம் இருக்கிறது என்று எண்ணுவது மடமை.

# 5 லட்சம் பேர் வேலையற்றிருக்கின்றனர்

கொழும்பு, செவ்வாய்

நாட்டில் இப்பொழுது சுமார் 5 லட்சம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என அண்மையில் சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து தெரிய வருகிறது.

1959-ம் ஆண்டிலிருந்து இதுவரையும் வருடா வருடம் வேலையில்லாமல் இருப்போர் தொகை 100,000 அதிகரித்து வந்திருப்பதாகவும் அறிக்கையில் இருந்து அறியக்கிடக்கிறது.

இவ்வருடத்தில் முதல் இரண்டு மாதங்களான ஜனவரி பெப்ரவரியில் தொழில் நுட்ப நிர்வாக குமாஸ்தாக்கள் தகுதியுடைய சுமார் 37,000 பேர் வேலையெதுவும் இல்லாமல் இருப்பதாகவும் தொழில் பயிற்சி உடைய 17125 பேர் வேலை இல்லாமல் இருப்பதாகவும் பயிற்சியற்றவர்களில் 63,940 பேர் வேலையில்லாதிருப்பதாகப் தியப்பட்டுள்ளதாக அண்மையில் வெளியான தொழில் கெஸட் தெரிவிக்கின்றது. ஆனால் ஜனவரியில் 488 பேருக்கும் பெப்ரவரியில் 661 பேருக்குமே வேலை வழங்கப் பட்டுள்

(5-ம் பக்கம் பார்க்க)



GC/181



## வானொலிநிகழ்ச்சிகள்

புதன் 6-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு "விஞ்ஞானம்" பேசுபவர் — வி. கே. நல்லையா, 7-30 தங்கராணி சனகசபை — பாட்டு, 8-00 முல்லிம்நிகழ்ச்சி, 9-15 த. இராசலிங்கம் — பாட்டு, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இசைக்கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 கவிகுஞ்சர பாரதியார் பாடல்கள், 2-40 ஜெயபேரிகை — வாத்திய இசை.

மாலை 5-15 பி. ஆர். எஸ். மணி — புல்லாங்குழல், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 அரசியல் அறம், 7-45 விட்டு விடுதலை — நாடகம், 8-00 திரைப்படஇசை, 8-30 வயலின், 8-45 குரல்இசை, 9-15 இம்மாதப்பாடல், 9-20 நாம் ஆர்க்கும் குடிஅல்லோம்— இசைச்சித்திரம், 9-45 இசைமாலை, 10-00 பி. ஆர். எஸ். மணி — புல்லாங்குழல்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
Audrey Hepburn
Shirley Maclaine
in
The Loudest Whisper
(ADULTS ONLY)


சதிவழக்கு விசாரணை

## நிரந்தரக் காரியதரிசிக்கு 'சமன்ஸ்' அனுப்ப கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

நேற்று முன் தினம் காலை புரட்சிச் சதிவழக்கு ஆரம்பமானபோது எதிரிதரப்புச் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஏ. எச். சி. டி சில்வா கியூ. சி. பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸை சில குறிப்பிட்ட தஸதாவேஜுகளை கோர்ட்டில் சமர்ப்பிக்குமாறு கட்டளை பிறப்பிக்கவேண்டுமென்று நீதியரசர்களைக் கோரினர். திரு. டி. சில்வா கியூ. சி. கோரியுள்ள தஸ்தாவேஜுகளின் விபரம் வருமாறு:

1. சிறைச்சாலைக் கமிஷனருக்கும், வெலிக்கடை, மகஜின் சிறைச்சாலைகளின் பிரதம அதிகாரிக்கும், 1962-ம் ஆண்டு ஜனவரி 28ந் திகதி முதல் அமுலுக்குவந்த அவசரகாலச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை நடத்தும் முறைபற்றி, நிரந்தரக் காரிய தரிசி பிறப்பித்த எல்லாக் கட்டளைகளினதும், மூலப்பிரதிகள்.

2. சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் இருந்தவர்மீது அவசரகாலச் சட்டத்தின் 22ம் பிரிவுக்கமைய அவர் பிறப்பித்த எல்லாச் சட்டங்களினதும் பிரதிகள்,

எதிரிதரப்பின் மற்றொரு சிரேஷ்ட வழக்கறிஞரான திரு. கன்னங்கரா சிறைச்சாலைக் கமிஷனர்மீதும் சிறைச்சாலை வைத்திய அதிகாரிமீதும் சிறைச்சாலைப் பதிவுப் புத்தகத்தை அல்லது கைதிகளின் உடல்நிலைபற்றி அவ்வப்போது குறிப்புக்கள் எழுதிவரும் பதிவுப் புத்தகத்தை கோர்ட்டில் சமர்ப்பிக்கும்படி கட்டளை பிறப்பிக்கவேண்டுமென்று கோரினர்.

பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் உயர் அதிகாரிகளுள் ஒருவரான திரு. பி. எல். பெர்னாண்டோ பின்னர் சாட்சியம் அளித்தார்.

மே 22, 24 திகதியிடப்பட்ட இரண்டு கடிதங்கள் அவரிடம் காட்டப்பட்டபோது அவைகள் வி. இ. பெரேராவினால் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்கு எழுதப்பட்டவை என்று தெரிவித்தார்.

திரு. கன்னங்கரா குறுக்கு விசாரணை செய்தார்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஈ. டபிள்யூ. ஜயக்கொடி சில தஸ்தாவேஜுகளை இனங்கண்டுபிடிப்பதற்காக அழைக்கப்பட்டார்,

திரு. கன்னங்கரா: திரு. ஜயக்கொடி முக்கியமான தொரு சாட்சியாவார். சில தஸ்தாவேஜுகளின் எழுத்தையும் அவற்றிலுள்ள கையொப்பங்களையும் இனங்கண்டுபிடிப்பதற்காக அவர் வந்துள்ளார்.

நீதியரசர் பெர்னாண்டோ: இது எதிர்பாராத நிகழ்ச்சியாகும்.

திரு டி. சில்வா: பிராஸிக்கியூஷன் தரப்பினர் வழக்கை நடத்திய முறை திரு. பெரேராவைப் பெரிதும் பாதிப்பதாகும் எனது கட்சிக்காரர் சாட்சியம் அளிக்கவேண்டிய நிலை எழுந்துள்ளது பிரபு.

நீதியரசர் சான்சோனி: அட்டோர்னி ஜெனரல் கடிதம் எழுதியவர்பற்றிய சாட்சியங்களை சமர்ப்பித்துள்ளார். திரு. பெரேரா சாட்சியம் அளிப்பது பற்றிப் பின்னர் கவனிப்போம்.

### 5 லட்சம் பேர் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக அதே அறிவித்தல் தெரிவிக்கின்றது.

கிராமப் புறங்களில் நிலத் தட்டுப்பாட்டினால் வேலையில்லா திண்டாட்டம் மலிவதாகவும், தோட்டப் பகுதிகளில் வேலைகள் குறைந்து வருவதால் வேலையில்லாமல் போவதாகவும் கூறப்படுகிறது. நகரப் புறங்களில் படித்துவிட்டு வேலையற்றிருப்பவர் தொகை அதிகரித்துக் கொண்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

### அலவன்ஸ் அதிகரிப்பு

கொழும்பு, செவ்வாய்

தபால், தந்தி விநியோக ஊழியர்களின் சைக்கிள் அலவன்ஸ் அதிகரிக்கபபட்டுள்ளது. தபால் இலாகா செய்து கொண்ட தீர்மானத்தைத் தொடர்ந்து திறைசேரி இந்த ஊழியர்களின் சைக்கிள் அலவன்ஸ் அதிகரித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஊழியர்களுக்கு இதுவரையும் 1ரூபா சைக்கிள் அலவன்ஸாகவும் வெளியூரிலுள்ளவர்களுக்கு 1-50 சதமும்கொடுக்கப்பட்டு வந்தது. புதிய திட்டத்தின் படி கொழும்பு மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு 1 ரூபா 50 சதமும் வெளியூரில் உள்ளவர்களுக்கு 2 ரூபாவும் கொடுக்குமாறு திறைசேரி சகல தபால் தலைவர்களையும் பணித்துள்ளது.

கிரிக்கெட் விளையாட்டு காலத்தில்

## சென். ஜோன்ஸின் நிலை யாழ்ப்பாணத்திலே தோற்கடிக்கப்படாத கல்லூரி!

யாழ்ப்பாணம், புதன்

இவ்வருட கிரிக்கெட் விளையாட்டுக்காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள மற்றைய கல்லூரிகளுடன் சென். ஜோன்ஸை ஒப்பிட்டுப்பார்க்கையில் சென். ஜோன்ஸ் கல்லூரி ஒரு மகத்தான இடத்தைப் பிடித்துக்கொண்டது என்பது தெளிவாகிறது. ஏழு கல்லூரிகளுடன் இடம் பெற்ற கிரிக்கெட் மோதலில் சென். ஜோன்ஸ் கல்லூரி மூன்று கல்லூரிகளை இன்னிங்ஸால் தோற்கடித்துள்ளது. நான்கு கல்லூரிகளுடன் சமவெற்றி ஈட்டியுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம். தெய்வேந்திரா, பி. கனகதுரை, சி ஆனந்தகிருஷ்ணன், வி சிவகுமார் ஆகியோரின் விளையாட்டுகள் சிறப்பாகவிருந்தன. நாளந்தாவுடன் எதிர்த்து விளையாடியதில் எம். தெய்வேந்திரா 103 ஓட்டங்களை எடுத்தார். யாழ். கல்லூரியுடன் எதிர்த்து மோதியதில் பி. கனகதுரை 103 ஓட்டங்களை எடுத்தார். சி. ஆனந்தகிருஷ்ணன், வி. சிவகுமார், என். சிவகுமார் ஆகியோர் 50 ஆட்டங்களுக்கு அதிகமாகவே எடுத்திருந்தனர். இவையெல்லாம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் சிறப்பை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன. பந்து வீசுவதில் ஜே. வைரவப்பிள்ளை, பி. கனகதுரை, எம். தெய்வேந்திரா, சி. சூரியகுமார், கியூ. ரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் எதிர்த்து விளையாடிய சென். பட்றிக்ஸ்' சுன்னாகம் ஸ்கந்தவரோதயா, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவை இன்னிங்ஸால் தோற்றன. ஹாட்லிக் கல்லூரி, கண்டி சில்வஸ்டர் கல்லூரி, கொழும்பு நாளந்தா, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றுடன் மோதியதில் சென். ஜோன்ஸ் சமவெற்றியீட்டியது.

பொதுவாகக் கூறுவதென்றால், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி வேறு எந்தக் கல்லூரிகளிலும் பார்க்க ஒருபடி முன்னேறிவிட்டதென்றுதான் சொல்லலாம்.

சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய எம். தெய்வேந்திரா, நாளந்தாவுடன் விளையாடியதில் 100 க்கு மதிகமான ஓட்டங்கள் எடுத்தது பாராட்டுக்குரியது. இவருடைய ஆற்

(6ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி கரபந்தாட்ட போட்டி முடிவுகள்

கொடிகாமம், செவ்.

சாவகச்சேரி நல்வாழ்வுச் சங்கத்தின் ஆதரவில் நேற்று மாலை சாவகச்சேரி அண்ணா விளையாட்டுக் கழகத்திற்கும் ('பி' பிரிவு) கைதடி யப்பான் விளையாட்டுக் கழகத்திற்கும் ('ஏ' பிரிவு) நடைபெற்ற கரபந்தாட்ட போட்டியில் அண்ணா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இரு பகுதியினரும் இறுதிவரை மிகவும் சுறுசுறுப்பாக விளையாடி பார்வையாளர்களுக்கு உற்சாகத்தை அளித்தார்கள்.

நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி அண்ணா விளையாட்டு கழகத்திற்கும் (ஏ பிரிவு) குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்திற்கும் நடைபெற்ற கரபந்தாட்ட போட்டியில் உதயதாரகை வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் மாலை கரவெட்டி நித்திய கல்யாணி விளையாட்டுக் கழகத்திற்கும் மட்டுவில் தெற்கு வானம்பாடி விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெற்ற கரபந்தாட்ட போட்டியில் வானம்பாடி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை மாலை சாவகச்சேரி ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், மட்டுவில் வடக்கு மாணவர் விளையாட்டுக்கழகத் திற்கும் நடைபெற்ற போட்டியில் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.


### ஏல விற்பனைக்கு

எழுவைதீவு ப. நோ. கூ. சங்கத்துக்கு சொந்தமான பாய்வள்ளம் (6 டன்) 30-5-64 புதன்கிழமை 12 மணிக்கு எழுவைதீவு துறைமுகத்தில் ஏல விற்பனைக்கு விடப்படும்.

வள்ளத்தின் தளபாடங்களைப் பார்வையிட விரும்புவோர் 20-ம் திகதிக்கு முன்னதாக பார்வையிடவும்.

விலாசம்:- மனேஜர் எழுவைதீவு ப. நோ. கூ. சங்கம் எழுவைதீவு. 352

### ஒதிநின்ற செம்பாடு ஊரெல்லை ஒழுங்கை

மேற்படி வேலைக்குரிய கேள்விப்பத்திரங்கள் 18-5-64 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி வரையும் புலோலிக் கிராம சபைத் தலைவரால் கொடுக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் 20-5-64 புதன்கிழமைக்கு முன் பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். நேரில் கொடுக்க விரும்புவோரின் கேள்விப் பத்திரங்கள் 20-5-64 புதன் கிழமை காலை 10 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திர நகல் பிரதி ஒன்று வடபகுதி பிரதேச உதவி ஸ்தல ஸ்தாபன அதிபருக்கு அதே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

ரூபா 50 கட்டுப்பணம் கட்டியதின் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். மேலதிகமான விபரங்கள் அறிய விரும்புவோர், புலோலிக் கிராமசபைக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

(செ. மாணிக்கவாசகர்)
புலோலிகிராமசபைத்தலைவர்,
2-5-64 பருத்தித்துறை.
353

வரி விளம்பரம்

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில் சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்.
GABRIELS, Chunnakam. 275

### நன்றி நவிலல்

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி மாணிக்க திரு. வே. சதாசிவம் அவர்களின் அந்திமக் கிரியைகளில் நேரில் பங்குபற்றியவர்கட்கும் துக்கச் செய்திகள் அனுப்பியவர்கட்கும் எமது நன்றி. தனித்தனி நன்றி கூற முடியாமைக்கு வருந்துகின்றோம்.

திருமதி கா. சதாசிவமும்
289 குடும்பத்தினரும்.

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

"மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு" என்று கூப்பாடு போடுங் காலத்திலே சிறந்த உள்நாட்டுத் தயாரிப்புகளை உங்களுக்கு குறைந்தவிலையில் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 290

### Sale

For sale well bred pedigreed Alsatian female pups two months old wormed in perfect condition Rs. 100/- each. Callers only. Yogastan, Chunnakam South, Chunnakam. 291

சினிமாஸ் திரைகளில்

அடுத்த திரை விருந்து

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

நானும் ஒரு பெண்

தென்னாட்டில் 125 நாட்களுக்கு மேல் ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி

நடித்த

பெரிய இடத்துப் பெண்

# “இரண்டு மந்திரிகளை நீக்குவதாய் நான் கூறவில்லை” பிலிப்பின் அறிவிப்பு குறித்து பிரதமர் மறுப்பு

கொழும்பு, திங்கள்

**மந்திரி சபையிலிருந்து திருவாளர்கள் ஸி. பி. டி' சில்வாவையும், மைத்திரிபால சேனநாயக்காவையும் வெளியேற்ற நான் சம்மதித்ததேயில்லை. அப்படி நான் சம்மதித்ததாக திரு. பிலிப் குணவர்த்தன கூறியிருந்தால் அது உண்மையல்ல என்று பிரதமர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.**

**யு. என். பி.க் கட்சியினர் அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிசெய்திருக்கிறார்களென்று திரு. குணவர்த்தன சென்ற மார்ச் மாதம் 6-ம் திகதி பார்லிமெண்டில் பேசும் போது குற்றம் சாட்டியிருந்தார். அதைப்பற்றித்தான் அவரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினேன் எனவும் பிரதமர் கூறியிருக்கிறார்.**

திரு. குணவர்த்தனவுடைய மேதினப் பேச்சு சம்பந்தமாக பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு:-

ஐக்கிய இடதுசாரி முன்னணியின் மேதினக் கூட்டத்தில் திரு. பிலிப் குணவர்த்தன மந்திரிசபையிலிருந்து இரண்டு மந்திரிகளை வெளியேற்ற நான் சம்மதித்ததாககூறினரென பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. சென்ற மார்ச் மாதம் 6-ம் திகதி திரு. குணவர்த்தன பார்லிமெண்டில் பேசுகையில் யு. என். பிக்கட்சியினர் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதித்திட்டம் செய்ததாகத் தெரிவித்திருந்தார். அதைப்பற்றி அறிவதற்காகவே அவரை நான் அழைத்திருந்தேன். பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் அந்த விபரம்பற்றி இரகசியப் பொலிஸாருக்குத் தெரிவித்தேன். இப்பேச்சு வார்த்தைகள் முடிந்ததும் தற்போதைய அரசியல் நிலைமை பற்றியும் நாட்டை எதிர்நோக்கும் இதர பிரச்னைகள் பற்றியும் திரு குணவர்த்தன எனது கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மேதினப் பேச்சில் திரு. குணவர்தன இரண்டு மந்திரிகளை வெளியேற்றிவிட நான் சம்மதித்ததாக அவர் கூறியிருந்தால் அது முற்றும் தவறானது.

## பிலிப் இன்றி கூட்டரசாங்கம்?

கொழும்பு, திங்கள்

திரு. பிலிப் குணவர்த்தனவை விட்டு டாக்டர் என். எம். கோஷ்டியுடன் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கூட்டரசாங்கம் அமைப்பது சாத்தியமாகலாமென சில அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

திரு. குணவர்த்தனவின் சமீபத்திய பேச்சுக்கள் தான் இந்த சூழ்நிலையை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

கூட்டரசாங்கம் ஏற்படுவதற்காகவிருந்த முயற்சிகளில் அவ்வளவு சுறுசுறுப்பு இப்போது இல்லை. மேதினப் பேச்சுகளில் பலதரப்பட்ட அபிப்பிராயங்களை பல தலைவர்களும் தெரிவித்திருந்ததுதான் இதற்குக் காரணமாக இருக்கிறதாம்.

மந்திரிகளான திரு ஸி.பி.டி. சில்வா, திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியவர்களை வெளியேற்ற பிரதமர் சம்மதித்ததாக திரு. பிலிப் குணவர்த்தன மேதினத்தன்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## கிறிஸ்தவ தொழிலாளர் மேதின கூட்டம்

கன்னுகம், திங்கள்

கன்னுகம் அர்ச். அந்தோனியார் கழகத்தின் சார்பில் கோவில் முன்றலில் கிறிஸ்தவ தொழிலாளர் மேதினக் கூட்டம் நிகழ்த்தினர்கள். கன்னுகம் அர்ச். அந்தோனியார் கோவில் கட்டளைக் குரவர் வண. ஜெயசீலன் தலைமைவகித்தார்.

இன, மத வேறுபாடின்றி தொழிலாளர் ஒத்துழைக்க வேண்டுமென்றும், வேலைநிறுத்தத்தை தொழிலாளர் மலிவான ஆயுதமாகப் பாவிக்கக் கூடாதென்றும், நாட்டின் பொருளாதார விருத்தி தொழிலாளர் கையிலே தங்கியுள்ளதென்றும் அவர் அப்போது குறிப்பிட்டார்.

“தொழிலாளர் கட்சி அரசியலில் உணர்ச்சிவசப்பட்டு தேச நலனுக்கு இடையூறு விளைவிக்கக்கூடாது. கத்தோலிக்கர் வலதுசாரி ஆதிக்கத்தையோ, இடதுசாரி புரட்சியையோ விரும்பவில்லை” என்றும் கூறினர்.

கழக உப தலைவர் திரு. ஆசீர்வாதம் வின்சிலோ பேசுகையில், ஒரு தொழிலாளியின் ஊதியம் அவன் வயிற்றைமட்டும் வளர்ப்பதற்கானதல்ல, அவன் குடும்பம் முழுவதற்கும் வாழ்வூட்டும் வகையில் அமையப்படவேண்டும். தொழிலாளர் முதலாளிகளின் அடிமைகளல்ல. முதலாளிகளின் இலாபத்தில், நியாயபூர்வமான முறையில் பணியாற்றும் தொழிலாளர்கட்குப் பங்குகொடுக்கப்படவேண்டும். என்னதான் தாழ்வுற்று வறுமை மிஞ்சிக்கிடந்தாலும், தொழிலாளர்களும் மனிதர் என்ற கண்ணியத்தை சகோதர பாசத்துடன் காட்டவேண்டும். அதேசமயத்தில் வஞ்சகமில்லாத உழைப்பும், உண்மையான விசுவாசம் தொழிலாளர் மத்தியில் நிலைக்க வேண்டும்” என்றார்.

திரு. கே. செபமாலை, திரு. பி. அமலதாஸ், திரு. ஏ. அருள்பிரகாசம், திரு. எம். திருச்செல்வம் ஆகியோரும் பேசினர்.

## “சிறு சேவையாளர்களுக்கு தமிழ்க்குமாஸ்தாக்கள் இடையூறு”

### தொழிலாளர் சங்கத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்வாய்

“கோடீஸ்வரன் போன்ற குமாஸ்தாக்களை நம்பித் தொழிலாளர்கள் அவர்களைப் பின்தொடருவார்களேயானால் ஏமாற்றத்தையே அடைவார்கள். சிங்கள அரசாங்கத்திடம் சிறுசேவையாளர்கள் பெற்ற நியாயமான உரிமைகளைக்கூட அனுபவிக்க முடியாதபடி தமிழ் குமாஸ்தாக்கள் செய்கின்றனர். உத்தியோக உடைகள், சகாய நிதிப்பணம் ஆகிய சலுகைகளை சிறுசேவையாளர் பெற அவர்களுக்குக் கைலஞ்சம் கொடுக்க வேண்டும். அவர்களால் செய்யப்பட வேண்டிய இக்கடமைக்கு அரசாங்கம் வேதனம் கொடுத்தும் ஏழைகளான சிறுசேவையாளருக்கு, விமோசனம் அளிக்கப் பின்வாங்கும் இக்குமாஸ்தாக்கள் தொழிலாளர்களை நேர்மையாக வழிநடத்துபவர்கள்.”

இவ்வாறு அரசாங்க தொழிற்சங்க சம்மேளனக் காரியதரிசி திரு. எஸ். ஆர். அருமைநாயகம் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற பொதுமராமத்து தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்குத் திரு. தம்பித்துரை தலைமை தாங்கினர். இக்கூட்டத்திற்குச் சமூகமளிப்பதற்காக ஊர்காவற்றுறையிலிருந்தும் ஏனைய இடங்களிலிருந்தும் கடல் போக்குவரத்துச் சேவையில் கடமையாற்றும் தொழிலாளிகளுக்கு விடுதலை அளிக்கப்பட்டு கடற்போக்குவரத்துச் சேவையும் ரத்துச் செய்யப்பட்டது.

ரயில்வே ரன்னிங் செட் தொழிலாளர் சங்கப் பிரதிநிதி திரு. சிவலிங்கமும் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவு வருமாறு:

தலைவர்: திரு. கந்தையா, காரியதரிசி: திரு. தனநாயகம், தனாதிகாரி: திரு. நமசிவாயம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மணமான விவசாயிகளுக்கு காணிகள் வழங்க ஏற்பாடு

### யாழ். அரசாங்க அதிபர் முயற்சி

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், வவனிக்குளம், அக்கராயன்குளம், கரியாலை, நாகபடுவான், கோட்டை கட்டினகுளம், தென்னியான் குளம் ஆகிய இடங்களில் 1200 திட்டுக்களை மணமான விவசாயிகளுக்கு வழங்கவிருக்கிறார்.

வேலையில்லாத படித்த வாலிபர்களுக்கு 75 திட்டுகள் இம்மாதம் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் ஜூலை மாதத்தில் இக்காணிகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும், முதலில் பொதுவாடியில் வசிக்க இவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும அறிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 17-ம் திகதிக்குமுன் விண்ணப்பங்கள் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது

## சோஷலிஸம் என்ற . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இன்று அரசியல் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடிக்குக் காரணம் மக்கள் சக்தியும், அரசாங்கத்தின் சக்தியும் ஒன்றோடொன்று மோதப்பட்டுச் சின்னாபின்னமாக்கப் பட்டுள்ளதுதான். இதனால் எமது நாடு பின்நோக்கிச் செல்கின்றது. சிறுபான்மையினர் விஷயத்தில் கவனம் செலுத்தாது மேலும் வளரச் செய்வதால் தான் பொருளாதாரக் கஷ்டமேற்பட்டுள்ளது. 1956-ம் ஆண்டு தொடக்கம் நாம் சகல துறைகளிலும் பின்தங்கியவர்களாகத் தள்ளப்பட்டுள்ளோம். இலங்கை முன்னேற்றமடைய வேண்டுமானால் சிறுபான்மையினர் உரிமைகள் கொடுக்கப்படல்வேண்டும்.

வட்டுக்கோட்டை தொகுதி தமிழரசு வாலிபமுன்னணியினர் கொண்டாடிய இந்த மேதின விழாவில் பல இயக்கங்களைச் சேர்ந்த வாலிபர்கள் கலந்துகொண்டனர். அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தைச் சேர்ந்த எஸ். சோமசுந்தரம் பேசுகையில் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தமக்கென ஒரு கூட்டணியை ஆரம்பித்து தமது உரிமைகளைப் பெறுவதற்கு பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ் ஆசிரியர் சங்க செயலாளர் வ. மகாலிங்கம் பேசுகையில், “இன்று தமிழ் பேசும் இனம் பல வழிகளில் பாதிக்கப்படுகின்றது. தமிழ் அரசாங்க ஊழியர்கள் எல்லா வகையிலும் பாதிக்கப்படுகின்றார்கள். அரசாங்கம் சிறுபான்மையினரின் மொழியை அழிக்கவும் சிங்கள இனமாக மாற்றுவதற்கும் முயன்று வருகின்றது தமது தாய்மொழி ஒன்றாக இருக்க வேறு மொழியை கல்வி கற்க தூண்டும் கேவல நிலைமையை அரசாங்கம் உருவாக்கி வருகின்றது” என்று கூறினர்.

இலங்கைப் போக்குவரத்து சபையைச் சேர்ந்த இ. பீதாம்பரம் பேசுகையில், இடதுசாரி தொழிற்சங்க இயக்கங்கள் சிறுபான்மை மக்களாகிய எங்கள் விஷயத்தில் கவனம் செலுத்தாது காரியங்கள் ஆற்றி வருவதை நாம் கடந்த பல சம்பவங்களில் கண்டுள்ளோம் என்று கூறினர்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் பேசுகையில் கடந்த கால தொழிற் சங்க வரலாற்றை மனதில் கொண்டு நாம் எம்மைப் பொறுத்தவரை மொழி வழி பிரிந்து இயங்குவது தான் சிறந்த வழியாகும் என்றார். எம்மையார் தான் வகுப்புவாதி என்று கூறினாலும் நாம் எமது உரிமையைப் பெற முயல்வதை எந்த இயக்கத்தாலும் தடுக்க முடியாது என்றும் கூறினர்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க தொழிலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் பேசுகையில், சகல தொழிலாளர்களுக்கும் சமத்துவம் அளிக்கவேண்டும் என்ற நோக்குடன் எமது சங்கம்பாடுபடுகின்றது என்றார்.

## தேர்தலை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் குறைந்த பட்ச கோரிக்கைகளை அரசாங்கட்சியும், ஐக்கிய இடதுசாரி முன்னணியும் ஓரளவு ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், இதனல், திரு. பிலிப் குணவர்த்தன தலைமையிலுள்ள மக்கள் ஐக்கிய முன்னணியை தவிர்ந்த மற்ற இடதுசாரி கட்சிகளும், தமிழரசுக் கட்சியும், அரசாங்கத்துடன் சேர்ந்து தேர்தலை ஒத்தி போட பாராளுமன்றத்தில் வாக்களிப்பார்களெனவும் அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

சிறுபான்மையோர் பிரச்னைகளாகிய, இலங்கை இந்தியர் பிரச்சனையையும், மொழிப் பிரச்னையையும் ஒரு வருட காலத்தில் தீர்த்து விடமுடியாதென்றும் அதனாலேயே தேர்தலை ஐந்து வருடகாலத்திற்கு ஒத்திபோட வேண்டுமென்று அரசாங்க கட்சியை சேர்ந்த சிலர் தெரிவித்துள்ளதாகவும் இந்த ஐந்து வருடகாலத்தில், தமிழரசு கட்சி எம். பி. க்கள் எப்பதவிகளையும் பெருமல், தமிழர்களின் பிரச்னைகளை தீர்க்கும் விஷயங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வருவார்களென்றும் அறியப்படுகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஜுஹுறன்

( ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியுடன் ஒருவர் வந்து முனிவர் முன் வணங்கி, 101 தங்கக்காசுகள் இருந்த பட்டுப் பையை காணிக்கையாக வைத்தாராம்! அதைக்கண்டதும் உடனே பெரியவர் அதை அப்படியே எடுத்து இந்தா! இப்பாட்டைப் பாடிய உனக்குப் பரிசு கிடைத்துள்ளதென்று கூறிக்கொடுத்தாராம்!

காணிக்கை செலுத்தியவர் முனிவரின் ஆசிபெற்று முன்னர் மலாயா சென்றவர் அங்கு நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்ததும், மாதா மாதம் ஒரு பவுன் சேர்த்தார். அங்கு விவாசமும் ஆயிற்று. 101 பவுன் சேர்ந்ததும், மனைவியுடன்வந்து முனிவரை வணங்கி அதை செலுத்தியதாக அந்த அன்பர் தெரிவித்தார்! நடந்தகதை எப்படி! பொன்னும் மெய்ப்பொருளும் இப்போதும் இறைவன் கொடுக்கிறாரல்லவா?

* * *

சங்கநிதி பதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடு வானளத் தருவரேனும், மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம் மாதேவர்க் கேகாந்த ரல்லராகில், அங்கமெலாங் குறைந்தழுகுதொழு நோயராய் ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனுங், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே. —திருநாவுக்கரசர்

## சென். ஜோன் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றல்— சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு இம்முறை ஓரளவு ‘உயிர்’ அளித்திருக்கிறது.

விரைவாக பந்து வீசுவதில் சிறப்பாக விளையாடிய பி. கனகதுரை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் விளையாடியதில் 103 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இம்முறை இவர் 23 விக்கட்டுகளை கைப்பற்றி இருந்தார்.

நிசேர்விலிருந்த ‘விக்கட் கீப்பர்’ எஸ். எம். மூத்தநம்பி வயதில் 15 மட்டுமே எட்டியிருந்தாலும், கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் குறிப்பாக விக்கட்கீப்பரில் யாழ்ப்பாணம் பாடசாலைகளிலே சிறந்தவராக காணப்பட்டார். அவரிடம் திறமை இருக்கிறது. அதை அவர் விருத்திசெய்ய வேண்டும்.